வர்த்தகரீதியான பாலியல் சுரண்டலுக்கும் விருப்பமின்றி அடிமைத்தனத்திற்கும், ஆண்களும் பெண்களும் இழிவியாபாரத் தேவைகளுக்காகக் கடத்தப்படுவதற்கு மூலாதாரமாகவும் இலக்கு நாடாகவும் இலங்கை இருக்கின்றது. நிர்மாணத் தொழிலாளர்களாக, இல்ல வேலையாட்களாக அல்லது ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களாகத் தொழில் புரிவதற்கு, இலங்கை ஆண்களும் பெண்களும் சட்டரீதியாக, மத்திய கிழக்கு நாடுகள், சிங்கப்பூர், ஹொங்கொங், மலேசியா, தென் கொரியா போன்ற நாடுகளுக்கு இடம் பெயர்கின்றார்கள். எப்படியிருப்பினும், நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள், அச்சுறுத்தல்கள், உடல் ரீதியான அல்லது பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், சில சந்தர்ப்பங்களில் தொழிலுக்காக நாட்டை விட்டுச் செல்ல முன்னர், ஆட்சேர்ப்பு முகவர்களினால் விதிக்கப்படும் பெருந்தொகையான கட்டணங்கள் காரணமாக ஏற்படும் கடன் தொல்லை என்பவற்றை எதிர்நோக்கும் போது, சிலர், விருப்பமின்றி, அடிமைத்தன நிலைமைகளுக்குள்ளாகின்றார்கள். ஒரு சந்தர்ப்பத்தில், இலங்கையைச் சேர்ந்த ஆண்கள், விருப்பமின்றி, அடிமைத்தன வேலைகளைச் செய்வதற்காக, இராக்கிற்குக் கடத்தப்பட்டார்கள். வர்த்தகரீதியான பாலியல் சுரண்டலுக்காகவும் கட்டாய வேலைக்காகவும், பிள்ளைகள் உள் நாட்டில் கடத்தப்படுகின்றார்கள். வெளி நாட்டுப் பயங்கரவாத அமையமென்று, ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியிலுள்ள பிரதேசங்களிலிருந்து, பிள்ளைகளைப் படைவீரர்களாக அமர்த்துகின்றார்கள். இலங்கையில் பிள்ளைகளும் ஆயுதமேந்திய மோதல்களும் என்பது பற்றிச் செயலாளர் நாயகம், 2006 ஆம் ஆண்டு, டிசெம்பர், 20 ஆந் திகதி, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கை, பிள்ளைகளைப் படைவீரர்களாக அமர்த்துவதற்கு, அரசாங்கப் பாதுகாப்புப் படைகள், துணை இராணுவ அமையமொன்றிற்கு உடந்தையாக இருந்தன என்ற குற்றச்சாட்டைக் குறிப்பிடுகின்றது. தாய்லாந்தையும், சீன மக்கள் குடியரசையும், ரஷ்யாவையும், புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஏனைய நாடுகளையும் சேர்ந்த பெண்கள், வர்த்தகரீதியான பாலியல் சுரண்டலுக்காக இலங்கைக்குக் கடத்தப்படுகின்றார்கள் என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

கடத்தல்களை ஒழிப்பதற்கு வேண்டிய ஆகக் குறைந்த தரங்கள் தொடர்பாக, இலங்கை அரசாங்கம் முற்றாக இணக்கந்தெரிவிக்கவில்லை. எனினும், முற்றாக இசைவதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளில் அது ஈடுபட்டுள்ளது. கடந்த ஆண்டில் ஆட்கடத்தல்களை அணுகுவதற்கு, குறிப்பாக விருப்பமற்ற அடிமை நிலைக்கு மக்களைத் தள்ளும் ஆட்கடத்தற்காரர்களைத் தண்டிப்பதற்கு, அதிகரித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நிரூபிப்பதற்குப் போதிய அளவு ஆதாரங்களை வழங்கத் தவறியதால் இலங்கை, அவதானிப்புப் பட்டியல், அடுக்கு இரண்டில் வைக்கப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம், ஆட்கடத்தலுக்கெதிரான நியதிச் சட்டத்தின் கீழ், இரண்டு சந்தேக நபர்களுக்கெதிராக, அரசாங்கம் வழக்குத்தொடர ஆரம்பித்தபோதிலும், ஆட்கடத்தற் குற்றங்களுக்காக அது, எவருக்கும் குற்றத்தீர்ப்பு வழங்கவில்லை. மேலும், உழைப்பாளிகளை, விருப்பமற்ற அடிமைத்தனமான வேலைகளுக்குள் தள்ளும் எண்ணத்துடன் அவர்களை, வஞ்சகமான ஏமாற்றுக்கள் மூலம் கவர்ந்திழுப்பதாக நம்பப்படும், வேலைக்கு ஆட்சேர்ப்பவர்களுக்கெதிரான கண்காணிப்புக்களை நடத்துவதற்கும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக, இலங்கை போதிய அளவில் முயற்சிகளில் ஈடுபடவில்லை. பாலியலுக்காகவும் உழைப்பிற்காகவும் ஆட்களைக் கடத்தும் குற்றங்களில் ஈடுபடுவோருக்கெதிராக வழக்குத் தொடர்தல், குற்றத்தீர்ப்பளித்தல் என்பன தொடர்பாக, இலங்கை, தனது பதிவுகளைக் கணிசமான அளவில் மேம்படுத்துவதுடன், வசப்படக்கூடிய குழுக்களுள், ஆட்கடத்தலுக்குப் பலியானவர்களை இனங்காண்பதற்கு முறைசார்ந்த நடைமுறையொன்றை நிறுவ வேண்டும். விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட பெண்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இத்தகையோர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

வழக்குத்தொடர்தல்

அறிக்கைப்படுத்தப்படும் இக்காலப்பகுதியில், சட்டங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளில், இலங்கை, குறைந்தபட்ச முன்னேற்றத்தையே கண்டுள்ளது. 2006 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்தில், தண்டனைச் சட்டக்கோவையில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின் மூலம், இலங்கை அரசாங்கம், சகல வகையான கடத்தல்களையும் தடைசெய்கின்றது. கட்டாயப்படுத்தப்பட்ட விபச்சாரத் தொழிலுக்குள் தள்ளுவதற்கான கடத்தலுக்காக, கடத்தலுக்கெதிரான சட்டத்தின் கீழ், இரண்டு வழக்குத் தொடர்தல்கள் ஆரம்பிக்கப்பட்டனவென்று அரசாங்கம் அறிவித்தது. இருந்தபோதிலும், வியாபார நோக்கங்களுடன்கூடிய பாலியல் சுரண்டல், விருப்பமற்ற அடிமைத்தனத்திற்குள் தள்ளுதல் என்பவற்றிற்காக, இலங்கையர்களை வெளி நாடுகளுக்குக் கடத்துவதற்கு வஞ்சகமான ஏமாற்று முறைகளைப் பயன்படுத்திய, தொழிலுக்காக ஆட்சேர்ப்போர் தொடர்பாக, அரசாங்கம் எவ்விதமான புலன்விசாரணைகளையோ வழக்குத் தொடர்தல்களையோ மேற்கொள்ளவில்லை. ஆட்கடத்தலுக்கு, உடந்தையாக

இருந்திருக்கக்கூடிய குடிவரவு அலுவலர்களைப் பற்றிய புலனாய்வுகளை மேற்கொள்ளவில்லை; ஆட்கடத்தலுக்கு உதவியமைக்காக, எந்தவோர் அரசாங்க அலுவலரேனும் கைது செய்யப்படவில்லை; அலுவலர்கள், கடத்தல்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் அறிக்கைகளும் இல்லை. புதிய சட்டத்தின் கீழ், கடத்தற் குற்றங்களுக்குத் தண்டனை வழங்கும் பொருட்டு, சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை அதிகரித்த அளவில் மேற்கொள்வதற்காக, இலங்கை, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், வெளி நாடுகளுக்கு ஆண்களையும் பெண்களையும் கடத்துவதற்கு உதவும், தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவரகங்களைப் பற்றிய போதிய அளவு புலனாய்வுகளை மேற்கொள்வதுடன், குற்றங்களுக்காக அத்தகைய முகவரகங்களுக்கெதிராக வழக்குத் தொடரும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு

கடத்தலுக்காளானவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக, இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளில், சிறிதளவு முன்னேற்றம் காணப்படுகின்றது. கடத்தப்பட்டவர்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் தொடர்பாக, அரசாங்கம், பிரதானமாக, அரசாங்கச் சார்பற்ற அமையங்களில் தங்கியிருக்கும் அதே வேளை, அது, இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களை, அரசாங்கச் சார்பற்ற அமையங்களிடம் செயலூக்கத்துடன் அனுப்பி வைக்கின்றது. கடத்துபவர்களுக்கெதிரான புலன்விசாரணைகளைச் செய்வதற்குத் தமக்கு உதவும் வண்ணம் காவல் (பொலீஸ்) துறையினரும் கடத்தலுக்காளானோரை ஊக்குவிக்கின்றார்கள். அத்துடன், தமது சான்றுரை பற்றிய முடிவிற்காகக் காத்திருக்கும், கடத்தலுக்காளாகிய வெளி நாட்டவர்களைப் பொறுத்தளவில், அவர்கள், தொழில்களைப் பெறுவதற்கும் காவற் படை அனுமதி வழங்குகின்றது. வெளி நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்ட இலங்கையர்களுக்கு இராஜதந்திர தூதரகங்களில், அவர்களுக்கென உறைவிடங்களை நடத்துவதற்கு அரசாங்கம் நிதி வழங்குகின்றது. கடத்தலுக்குள்ளாகி, பின்னர் இலங்கைக்குத் திரும்பி வரும் இலங்கைப் பெண்களுக்கு, உறைவிடம் வழங்குதல், ஆலோசனை வழங்குதல், வைத்திய கவனிப்பை வழங்குதல் என்பவற்றைப் பொறுத்தளவில், அரசாங்கம், குறைந்தபட்ச உதவிகளை மட்டுமே வழங்குகின்றது. விபச்சாரத்திற்காகக் கைது செய்யப்பட்ட பெண்களைப் போன்ற, இலகுவாக வசப்படும் பெண்கள் குழுக்களுள், கடத்தல்களுக்காளானவர்களை இனங்காண்பதற்கான, முறைசார்ந்த நடைமுறையொன்று இலங்கையில் இல்லை. இதன் விளைவாக, பாலியலுக்காகக் கடத்தப்பட்ட சில பெண்கள், சிறைப்படுத்தப்பட்டிருக்கலாம். அல்லது விபச்சாரத்திற்காகக் குற்றப்பணம் கட்ட வேண்டி ஏற்பட்டிருக்கலாம். கடத்தலுக்காளாகியமையினால் ஏற்படும் நேரடி விளைவுகளாக அமையும், பாதிக்கப்பட்டோருடைய சில செயல்களுக்காக, அவர்கள் தண்டிக்கப்படலாகாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், கடத்தலுக்காளாகிய இலங்கையர்கள், நாடு திரும்பும்போது, அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளையும் அரசாங்கம் மேம்படுத்த வேண்டும்.

தடுத்தல்

இலங்கை மேற்கொள்ளும் கடத்தல் தடுப்பு முயற்சிகள், குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளன. உல்லாசப் பயணத் துறையில், பிள்ளைகளைப் பாலியலுக்குப் யன்படுத்துதலை அழித்தொழிப்பதற்காக 'யூனிஸெ.'.ப்'பின் உதவியுடன் உல்லாசப் பயணச் சபை, தேசியச் செயற்பாட்டுச் செயற் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. உல்லாசப் பயணத் துறையில், பிள்ளைகளைப் பாலியலுக்காகப் பயன்படுத்துதல் பற்றிய, 'சகிப்பு மட்டம் பூஜ்யம்' என்ற கொள்கையை அரசாங்கம், தொலைக்காட்சி விளம்பரங்கள், வானொலி விளம்பரங்கள், துண்டு விளம்பரப் பலகைகள், விளம்பரப் பட்டிகைகள், மோட்டார் கார் ஒட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், விமானப் பயணத்தின் போது வழங்கப்படும் சஞ்சிகைகள் என்பவற்றின் மூலம் யாவரும் அறியும்படி செய்கின்றது. 2000 ஆம் ஆண்டின், ஐக்கிய நாடுகள் ஆட்கடத்தல்கள் (வுஜீ) பற்றிய மூல ஆவணத்தை, இலங்கை முறைப்படி ஏற்றுக்கொள்ளவில்லை.